பதிவு எண். எம். 8123.
தமிழியக்க நாளிதழ்
விலை காசு 6

குறள் நெறி
தமிழ் வாழ்க
ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி

மலர் 1 | மதுரை ஐப்பசி உக (6-11-66) வெளியூர் ஐப்பசி உஉ (7-11-66) | இதழ் 141

கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனாரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம் :
"குறள் நெறி"
வெளியீட்டகம்
மதுரை 5.

நிதியமைச்சரின் புள்ளி விவரம் பொய்யானது!

-தோழர். பி. இராமமூர்த்தி

மேலூர், நவ. 5-

இங்கு நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் தோழர். பி. இராமமூர்த்தி பேசுகையில் இந்த ஆட்சியில் பொருட்களின் விலை ஐம்பது விழுக்காடு மிகுதியாக உயர்ந்துள்ளது. ஆனால் நிதியமைச்சர் சசீந்திர சௌத்திரி ஐந்து விழுக்காடுதான் உயர்ந்திருப்பதாக கூறுகிறார். இப்புள்ளி விவரம் வேண்டுமென்றே துணிந்து கூறப்பட்ட பொய்யுரையாகும் எனக் கூறினர்.

இன்றைய ஆட்சியின் குறைபாடுகளை விளக்கி அவர் மேலும் உரையாற்றியதாவது:

"இந்த நாட்டில் இனிமேல் சாதியின் அடிப்படையில் வாக்குச் சீட்டுகளைப்பறித்துக் கொள்ள முடியாது. இன்று நம் நாட்டில் இருசாதிகளே உள்ளன. ஒன்று கொள்ளையடிக்கும் சாதி மற்றொன்று கொள்ளையடிக்கப்படும் சாதியைச் சார்ந்ததாகக் காங்கிரசும் கொள்ளையடிக்கப்படும் சாதியாகப் பொதுமக்களும் உள்ளனர். வரும் பொதுத் தேர்தல் இவ்விரண்டு சாதிகளுக்கும் நடைபெறும் போராட்டமேயாகும்.

பணம், செல்வாக்கு, சாதி போன்றவற்றைக் கருவியாகக் கொண்டும் காங்கிரசு வரும் தேர்தலில் வெற்றிபெற இயலாது. நிலக்கிழார்கள், பெருஞ்செல்வர் ஆகியோரின் பாதுகாப்புக்காகவே காங்கிரசு இருக்கிறது. இன்றைய காங்கிரசுக் கட்சியில் நிலக்கிழார்களே தலைவர்களாய் உள்ளனர்.

கட்டாயக் கொள்முதல் என்ற பெயரில் ஏழைகளைத் துன்புறுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். பெரும் நிலக்கிழார்களை இச்சட்டத்திற்குப் பணிய வைத்தல் வேண்டும். ஐந்து ஏக்கருக்கும் மிகுதியாக நிலம் உடையோர்களிடமே கட்டாயக் கொள்முதல் செய்யவேண்டும்.

மேலூர் தொகுதியில் உள்துறை அமைச்சரை எதிர்த்து எதிர்க்கட்சிக் கூட்டணியின் சார்பாக ஒரு வேட்பாளரே போட்டியிடுவார்.

வரும் பொதுத்தேர்தல் ஒரு வாழ்வுச் சிக்கலாகும். எனவே பொதுமக்கள் அனைவரும் தோளோடு தோள்நின்று காங்கிரசு அமைச்சரவையை நீக்க வேண்டும்"

இவ்வாறு தோழர். பி. இராமமூர்த்தி கூறினர்.

* * *

கலைஞர்களுக்குப் பேரறிஞர் அண்ணாவின் வேண்டுகோள்

சென்னை ஐப்பசி 20 (நவ.5)

சென்னையில் அஞ்சத்தக்கப் புயல் வீசியதின் பயனாக பல மக்கள் பலவகையாலும் அல்லலுக்கு ஆளானார்கள். அவர்களுக்கு உதவுமாறு பேரறிஞர் அண்ணா அவர்கள் திரைப்படக்கலைஞர்களுக்கு வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார்கள். அதில் குறிப்பிட்டுள்ளதாவது :—

சென்னையில் பொங்கிச் சீறியெழுந்தகடும் புயலால் ஏற்பட்டுள்ள அழிவுகளை அறிந்து உள்ளம் நடுங்கி வருந்தினேன். உயிரிழப்பு பொருளிழப்பு எவ்வளவு என்று கணித்தறிய முடியாமல் போனாலும் பேரளவில் இருக்கும் என்பதில் ஐயமில்லை, கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்கள் பேரிழப்புக்கு ஆளாகி ஆளாகியிருப்பர்.

புயலால் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டு உள்ளவர்க்கு உடனே உதவ வேண்டியது நமது கடனாகும், நமதுகழகத் தோழர்கள் முயற்சிசெய்வார்களென்று கருதுகிறேன்

கலைஞர்களும் வழக்கபோல் தமது வள்ளல் தன்மையைக் காத்து உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை. உதவுமாறு வேண்டுறேன்.

வசதி படைத்தப் பொது மக்களும் தம்மாலான உதவியை அளித்து ஆறுதல் அளிப்பார்களாக.

அரசு நடத்தும் கடை

மதுரையில் சிறப்பு அங்காடி திறக்கப்படுகிறது.

மதுரை, நவ 5-

இன்று மதுரையில் தமிழக முதலமைச்சர் அவர்களால் சிறப்பு அங்காடி திறந்துவைக்கப்பட இருக்கின்றது. இந்தச் சிறந்த அங்காடி கூட்டுறவுத் துறையில் உள்ள நேர்மை விலைக்கடை போன்றது. தில்லி, சென்னைபோன்ற பெரிய நகரங்களில் இத்தகைய அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வங்காடியில், காய்கறி, பலசரக்குகள், முதலியவைகளும், 'அமுல்', 'ஆர்லிக்ஸ்', 'ஓவல்டின்' முதலியவைகளும், ஏனங்கள், ஆடைகள் முதலியனவும் குறைந்த விலைக்கு விற்கப்படும்.

மதுரையில் முதன்முதல் திறக்கப்படும் இவ்வங்காடி மதுரை வடக்கு வெளி வீதியில் மைய அஞ்சல் அலுவலக முன்பாக உள்ள மாவட்ட மையக் கூட்டுறவுகட்டிடத்தில் நிறுவப்படுகின்றது.

இதன் தொடக்கவிழாவிற்கு கூட்டுறவு அமைச்சர் நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் தலைமை தாங்குகின்றார்.

மாலை 4 மணிக்கு இதன் தொடக்க விழா நடைபெறும்.

மதுரை அரண்மனையிலுள்ள அறமன்றங்கள் இடம்பெயரா

மதுரை, நவ. 5–

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையிலுள்ள - (மகால்) அறமன்றங்கள் அங்கேயே இருக்கும் என்று திடீரென்று அரசு அறிவித்துள்ளதாம்' திருமலை நாயக்கர் அரண்மனையில் மதுரை இராமநாதபுர மாவட்ட பிரிவு அறமன்றங்கள், துணைப் பிரிவு அறமன்றங்கள், முன்சீப் மன்றம் ஆகியவைகள் உள்ளன. அரண்மனையில் சுவர்களில் விரிசல்கள் காணப்பட்டதாகவும் ஆகவே அவைகளை மாற்றுவதற்கு அரசு எண்ணியதாகவும் அதற்கேற்ப சாத்தமங்கலம் கண்மாயில் புதியகட்டிடம் கட்டவும் அரசு முடிவு செய்தது. புதிய கட்டிடம் உருவாகும் வரையில் இவைகளை வேறு கட்டிடங்களில் வைப்பதற்காக முயற்சி நடைபெற்றது. இவ்வாறு மாற்றும் முயற்சியை வழக்கறிஞர்கள் விரும்பவில்லை. தமிழக அமைச்சரையும் அ. இ. க. தலைவர் காமராசரையும் கண்டு வழக்கறிஞர்கள் தங்கள் எண்ணத்தை அறிவித்தனர். அதற்கு ஏற்ப கோடை விடுமுறைவரை மாற்றும் எண்ணத்தை நிறுத்தி வைத்திருப்பதாக அரசு திடீரென அறிவித்துள்ளது.

குறள்நெறி
தமிழ் வாழ்க

தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 21 ஞாயிறு (6—11—66)

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில் — ௧௦௬௫

உணவுப் பேரணி

(இன்று) நவம்பர் 6 உணவுப் பேரணி ஒன்றினை ஆளுங்கட்சி தவிர்த்த அனைத்துக் கட்சிகளும் அறிவித்துள்ளன. மக்கள் உணவுப்பொருள் பெறுவதில் பல தொல்லைகட்கு ஆளாகிவருகின்றனர். விலையேற்றமே மிகப் பெருந் தொல்லையாகும். இத்தகைய விலையேற்றம் என்றுமே எங்குமே இருந்ததில்லை. இவ்விலையேற்றத்திற்கும் அதன் விளைவாய் நிகழ்ந்துள்ள கட்டுப்பாட்டுக்கும் காரணம் திறனற்ற ஆட்சியே என்பது வெள்ளிடைமலை. "இயற்றலும் ஈட்டலும் காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு" எனும் பொய்யாமொழிக்கு ஏற்ப ஆட்சி இல்லை.

ஆகவே ஆட்சியாளர்க்கு மக்கள்படும் அல்லலை அறிவித்து உணர்த்துவதற்காக இப்பேரணியை வகுத்துத் திட்டமிட்டுள்ளனர்.

அமைதியான முறையில் ஊர்வலமும், அதன் பின்னர் பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றலும் திட்டமிட்டபடி நடைபெறவேண்டும். மக்களாட்சியில் இவை மக்கள் கருத்து அறிவிக்கும் வாயில்களாகும். அக்கால் இப்பேரணி காரணமாக ஆட்சியாளர் அடக்குமுறையைப்பயன்படுத்துவார் என்று எண்ண இடமில்லை.

அடக்குமுறையைப் பயன்படுத்திப்பேரணி நடவாமல் செய்ய முயன்றாலும் மக்கள் அமைதிகுன்றாமல் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

அரசினர் செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடையவராய் இருத்தல்வேண்டும் என்பது மக்களாட்சிநெறி முறையாகும். மக்கள் சார்பாகக் கூறும் கருத்துக்களில் உள்ள உண்மையை அறிந்து மக்களின் குறைகளைப்போக்க முன் வரல் வேண்டுமேயன்றி, மக்கள் வாய்திறத்தல் கூடாது எனப் பணித்தல் பொருந்தாது.

மக்களும் ஆட்சியாளர் மீது கொண்டுள்ள சீற்றத்தை வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் தீர்த்துக்கொள்ள முயலல்கூடாது. தொடர்வண்டி, அஞ்சல் நிலையங்களை அழிப்பதனால் மக்களுக்குத்தான் இழப்பும் தொல்லையும் ஆகவே பேரணியை அமைதியாகவும் ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் நடத்த வேண்டிய பொறுப்பு அனைத்துக்

நாட்டின் ஏனைய பகுதிகளில் பெருங் கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அண்டை மாநிலமாம் ஆந்திர நாட்டில் கிளர்ச்சி நின்றபாடில்லை.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் பலவகை விளைந்துள்ள கேடுகள் உள்ளத்தை உருக்குகின்றன.

இச்சூழ்நிலையில் மக்கள் தாம்படும் துயரத்தை அறிவிக்கும் பேரணியில் ஈடுபடுவதை ஆட்சியாளர், எதிர்க்கட்சியினரின் 'தேர்தல் ஆயுதம்' எனப் புறக்கணிக்க மாட்டார்கள் என்று கருதுகின்றோம்.

மக்கள் நலமுடன்தான் வாழ்கின்றார்கள். உணவு முதலியன ஒழுங்காக கிடைக்கின்றன, என்று முழங்கி வருவதனாலேயே இப்பேரணியை நடத்தி உண்மை நிலையை உணர்த்த மக்களணி முற்பட்டுள்ளது. மக்கள் குறைகளைச் செவிமடுத்து மக்கள்படும் அல்லல்களை நீக்க ஆட்சியாளர் உடனே முன்வருவார்களாக.

எழுத்தாளர் மன்றம் மதுரை
8-ஆவது ஆண்டுவிழாப்போட்டி

பரிசுக்குரிய படைப்புக்களை நடுவர் ஆய்ந்தெடுத்துப் போட்டியில் வெற்றி பெறும் எழுத்தாளர்களுக்கு டிசம்பர்திங்களில் நடைபெறவிருக்கும் மன்றத்தின் எட்டாம் ஆண்டுவிழாவன்று பரிசுகள் வழங்கப்பெறும். கதை, கட்டுரை, நாடகம் இம்மூன்றும் முழுப்பக்கங்கள் ஐந்திற்கு மேற்போகாமல் பக்கத்திற்கு 35 வரிக்குட்பட்டுத் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாகஎழுதப் பெற்றிருத்தல்வேண்டும்.

பாட்டு: தாளின் ஒரே பக்கத்தில் 40 வரிக்குள் இலக்கண வரம்பிற்குட்பட்டு அமைதல் வேண்டும்.

பொதுப் போட்டித் தலைப்பு:

"மாற்றம்"

மன்றத்தின் உறுப்பினர் மட்டும் 'தோற்றம்' என்ற தலைப்பில் கதை, கட்டுரை, பாட்டு, நாடகம் முதலியவற்றை எழுதியனுப்பவேண்டும். உறுப்பினர்கள் பொதுப் போட்டியிலும் கலந்து கொள்ளலாம். மற்ற விதிமுறைகள் மேலே குறிப்பிட்டுள்ளவையே.

முடிவு தேதி:

20—11—66 ஞாயிற்றுக் கிழமைக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுத்தோவியங்கள் கிடைக்கப்பெறல் வேண்டும்.

செயலர்,
எழுத்தாளர் மன்றம்,
3, நகரவைக் குடியிருப்பு,
சுப்பிரமணியபுரம்
மதுரை—11.

* * *

"காலத் தாழ்வு ஏற்படலாம்"

குறள்நெறி செய்தித் துறை

தஞ்சாவூர் நவ. 5-

தஞ்சாவூர்—நாகூர் தொடர்வண்டி காலந் தாழ்ந்து வருவதால் கல்லூரிகளுக்குக் குறித்த காலத்தில் செல்ல இயலவில்லை என்பதற்காகப் பூண்டி கல்லூரி மாணவர்கள் தொடர்வண்டியை நிறுத்திக் கிளர்ச்சி செய்தனர் அல்லவா!

இக்கிளர்ச்சிக்கு ஈடு தரும் நடவடிக்கையாக தொடர்வண்டி நிலைய அலுவலர்கள் வெங்கடராமணியும், சீனிவாசனும் கல்லூரிக்குச் சென்று மாணவர்களைக் கண்டு பேசினர்.

வட்ட மேற்பார்வையாளர், வெங்கடரமணி "மாணவர்களின் வேண்டுகோள் முறையானதே என்றும் தொடர் வண்டி நேரத்தை மாற்றுவதில் பல சிக்கல்கள் உள. சென்னையில் உள்ள உயர் அலுவலர்களும்தொடர்வண்டிநேரத்தை மாற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். அதற்குச் சிறிது காலத் தாழ்வு ஏற்படும். அது வரை மாணவர்களும் ஆசிரியர்களும் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஐந்தாண்டுத் திட்டங்களால் விளைந்த பயன் என்ன?

-கே. பி. சானகி அம்மாள்

மதுரை, நவ. 3- மதுரையில் கருவேப்பிலைக் காரத் தெருவில் அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டம், ஆர். நவநீத கிருட்டினன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றிய கே.பி. சானகி அம்மாள் (பொதுவுடைமை) காங்கிரசுக் கட்சி ஐந்தாண்டுத் திட்டங்கள் பலவற்றை வகுத்துப் பணத்தைப் பாழாக்கியதே தவிர ஐந்தாண்டுத் திட்டங்களால் மக்களுக்கு எந்தவித பயனும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது 'காங்கிரசு முதல், இரண்டு ஆட்சி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் முறையே 1005 கோடி, 2800 கோடி, 10,000 கோடி உரூ. செலவழித்துள்ளது. இப்படிக் கோடிக் கணக்காகத் திட்டங்கள்வகுத்துச் செலவு செய்தும் காண்பது என்ன? பசி, பிணி இவைகளே. திட்டங்களின் மூலம் மிகுதியான அளவில் பணம் பாழாக்கப்பட்டதே தவிர ஏழை, நடுத்தர மக்கட்கு இதனால் எந்தவிதப் பயனும் கிடைக்கவில்லை.

காங்கிரசு ஆட்சிகளுக்கும் உணவுப் பங்கீட்டின் அளவு 6 அவுன்சேயாகும். இத்தகைய குறைந்த அளவு மக்களுக்குக் கிடைப்பதற்குக் காரணம் என்ன? பெருமளவில் நிலப்பரப்புக்கு உரிமையுடையோராக இருப்பவர்களிடம் ஆளுங்கட்சி சரியான முறையில் கொள்முதல் செய்வதில்லை.

இக்காரணத்தால் அமெரிக்காவிடம் நம் அரசு கையேந்த வேண்டியுள்ளது. இப்பத்தொன்பது ஆண்டுக் காங்கிரசுக் கட்சி ஆட்சியில் ஏற்பட்ட அவலநிலையை மாற்றப் பொதுமக்கள் வரும் தேர்தலில் எதிர்க் கட்சிக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். வரும் ஆறும் நாள் உணவுப் பேரணியை எதிர்க் கட்சியினர் சிறப்பாக நடத்தப் பொதுமக்கள் உறுதுணையளிக்க வேண்டும்.

இவ்வாறு கே. பி. சானகி அம்மாள் கூறினர்.

திரு. என். கே. பாலுவேலயன், வரும் 67 தேர்தலில் எதிர்க்கட்சி ஆட்சி அமைக்கப் பொதுமக்கள் ஆவன செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

அடுத்துப் பேசிய சுதந்திராக் கட்சித் தலைவர், வழக்கறிஞர் இராமசுப்பிரமணியம் ஆட்சியின் ஊழல்களை எடுத்து விளக்கினார்.

மற்றும் கூட்டத்தில் திருவாளர்கள் எச. கன்னையா (தமிழரசு) எச. எச. மணி (சி.பு.க.) எம். எம். செரீப் (முசுலிம்லீக்) எம். என். ஆதிநாராயணன் (முன்னேற்றக் கட்சி), [illegible], பி. என். எச. சுல்தான் (சுதந்திரா) இராதாகிருட்டிணன் (மாணவர்) கலந்து கொண்டு உரையாற்றினர்.

நா. மகாலிங்கம் நன்றி கூறினர்.

ஐந்தாண்டுத் திட்ட விளக்க விழா

தஞ்சாவூர் நவ. 4-

தஞ்சை திருவையாறு, ஒரத்தநாடு ஊராட்சி மன்றங்களின் "ஐந்தாண்டுத் திட்ட விளக்க விழா" தஞ்சாவூர் இராமநாதன் செட்டியார் மன்றத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கு கொண்டு தஞ்சை மாவட்டத் தண்டல்நாயகர் திரு. இரெங்கபாசியம் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றியும் அவற்றால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட நலன்களை விளக்கிக் கூறினர். உழவுத் தொழில் முன்னேற்றத்திற்கு ஐந்தாண்டு திட்டங்கள் உறுதுணையளித்துள்ளன என்றும் கூறினர். பின்னர் ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர் பி. சிவஞானம் உரையாற்றினர். ஐந்தாண்டுத் திட்டத்தை விளக்கியும் நன்மைகளை எடுத்துக் காட்டியும் நாடகம் ஒன்று நிகழ்ந்தது.

வாழ்வியற் பொருட்களின்]

விலைப்பட்டியல்

திருச்சி வானொலி நிலையத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள வாழ்வியற் பொருட்களின் விலைப் பட்டியல் வருமாறு:-

நெல்	குவிண்டல் விலை
தஞ்சாவூர்சம்பா	-47-00
கும்பகோணம் குறுவை	40-00
திருச்சி நடுத்தரம்	42-00
மதுரை நடுத்தரம்	42-00
சிதம்பரம் புழுங்கல்	72-40
ஈரோடு	88-40
சோளம்:	
சேலம் வெள்ளை	55-00
சிவப்புரகம்	50-00
கடலைப்பருப்பு	
விழுப்புரம்	135-00
பொள்ளாச்சி	167-00
குற்றாலம்	157-00
விருதுநகர்	160-00
மிளகாய்	
மதுரை சம்பா	580-00
மதுரை முண்டு	700-00
பனைவெல்லம்	
உடன்குடி	130-00
தூத்துக்குடி	134-00
வெங்காயம்	
பெல்லாரி	136-00
மஞ்சள்	
ஈரோடு விரலி	147-00
கட்டை	125-50
உருளைக்கிழங்கு	
மேட்டுப்பாளையம்	88-89
மக்காசோளம்	
புதுக்கோட்டை	60-38
மணிலாபயிறு	180-00
விருதுநகர்	
புழுங்கல் அரிசி கிலோ	0-70
கடலைப்பருப்பு	1-03
து. பருப்பு	1-16
உளுந்தம்பருப்பு	1-16
தேங்காயெண்ணெய் லிட்டர்	5-25
[illegible]	[illegible]
கொத்து மல்லி	3-4
உருளைக்கிழங்கு கிலோ	1-

கட்சி நலன் வேறு நாட்டு நலன் வேறு

-நந்தா

புதுதில்லி, நவ. 4

விசயவாடா எஃக்காலைக் கிளர்ச்சிக்குப் பின்னர் ஒரு பெரிய தலைமைக் கட்சி போ இருப்பதாக இன்று மக்களவையில் எச.கே. பட்டீல் நெறிவித்தார்.

நடுவணமைச்சரவையின் மேல் எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் [illegible] ஐவர்தம் குறிப்பிட்டார்.

தமது ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்துவதால் யாருக்கும் எவ்விதப் பலனும் கிடைத்துவிடப் போவதில்லை. தொடர்வண்டிகளுக்குத் தீவைப்பதும் பொருளற்ற குறும்புச் செயல்களேயன்றி வேறெவ்வித நோக்கமும் அற்றவை" என அவர் கூறினர்.

உள்துறையமைச்சர் நந்தா பேசுகையில் "எந்த ஒரு குடியாட்சியிலும் மன்பதையின் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் ஆரவாரத்தாலும் வன்முறைக் கிளர்ச்சிகளாலும் ஆணைப்பணிய வைப்பது இயலாத செயலாகும்", எனக் கூறினர். நாட்டின் பொதுச் சொத்துக்களுக்கு ஊறு ஏற்படும்போது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருக்க இயலாது. பொது ஒழுங்கு சிதைப்பட்டால் கடும் நடவடிக்கை எடுப்பதே அரசினரின் முதற்பணியாகும். அனை [illegible] ளுக்கும் நாட்டின் நலனுக்கும் இடையே வேறுபாடு இருப்பதை உணரவேண்டும். நாடு இப்போது பொருளாதாரத் துறையில் ஒரு பேரிடரை எதிர்கொண்டு சமாளிக்க வேண்டியுள்ளது.

அரசினர் தாங்கள் கடமையை எவ்வாறாக இருப்பினும் குறை கூறப்படுகின்றனர். காவல் துறையினரும் இவ்வாறே கிளர்ச்சியின் போது கடும் நடவடிக்கை எடுக்காது இருந்து விட்டால் "கிளர்ச்சியை அடக்கத் தகுதியில்லாதவர்" எனத் தூற்றப் படுகிறார்கள். கிளர்ச்சியை அடக்க வேறுவழியின்றிக் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் குடியாட்சிக்குப் புறம்பாக நடந்து கொள்வதாகக் குறை கூறப்படுகிறார்கள். இவ்வாறு திரு. நந்தா கூறினர்.

முறையீடும்

தஞ்சாவூர், நவ. 4

தஞ்சை மாணவர் குழுத் தலைவர் திரு. பாலு கட்சி மொழிச் சிக்கலுக்கு உடனடியான தீர்வுகாண வேண்டுமென்றும் இந்தி பேசாதோரின் உணர்வுகளை மதித்து ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்படியான ஆட்சி மொழிச் சட்டத் திருத்தத்தை இம்மக்களவைக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியை ஒரு தந்திச் செய்தி மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

வங்கிகளை நாட்டுடைமையாக்கக் கூடாது
விற்பனையாளர்களின் வேண்டுகோள்

மதுரை, நவ. 4

மதுரை-இராமநாதபுரம் விற்பனையாளர்கள் சங்கச்சார்பில் சேமிப்பு வங்கி ஆளுநர் திரு. பி. சி. பட்டாச்சாரியாவிற்கு கனரா வங்கியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வமயம் சங்கச் செயலாளர் திரு. வி. பி. [illegible] படித்து அளித்தார். அதில் சேமிப்புவங்கியின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே தனியார் துறை வங்கிகள் இயங்கி வருவதால் வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டாம் என்று வேண்டப்பட்டுள்ளது.

திரு. பட்டாச்சாரியா வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சங்கத்தின் வேண்டுகோளை கவனிக்க [illegible]

செயலர் வி. ஏ. பாலசுப்ரமணியன் நன்றி கூறினர்.

மக்களவையில் நடப்பதும்...

புதுதில்லி, நவ. 4

இந்தியைத் தேசிய மொழி ஆக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தும் ஒரு சட்டவரைவு கூடிய விரைவில் மக்களவையில் ஆய்வுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது.

உள்துறைத் துணை அமைச்சர் வி. சி. சுக்லா மக்களவையில் இதனை வெளித் தெரிவித்தார்.

காங்கிரசுப் பெருந்தலைவர் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

இந்தூர், நவ. 4

இந்தூர் நகர்க் காங்கிரசுக் கட்சியின் சார்பில்நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர் பேசத் தொடங்கி இரண்டு மணித்துளிகளுக்குள் பெருங்கூச்சலும் குழப்பமும் கிளம்பியதால் அவர் பேச்சை நிறுத்த வேண்டியாயது. ஏறக்குறைய இருபதாயிரம் பேர்கள் சுபாச திடலில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வந்தனர். காமராசர் தனது பேச்சை முடிக்கும் பொழுது கலைக்கு வழக்கின்றிச் செருப்புகள், சிறுகற்கள் உணவுப் பங்கீட்டின் மூலம் அளிக்கப்பட்ட கோதுமை அடங்கிய சிறுபைகள் ஆகியவை மேடையை நோக்கி வீசப்பட்டன.

தமிழில் பேசிக் கொண்டிருந்த காமராசரின் குரலும் அதை இந்தியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தவரின் குரலும் பேரொலியின் முன் கேட்க முடியாதவாறு அடங்கப்பட்டது.

காமராசர் பேசத் தொடங்கிய இருமணித் துளிகளுக்குள் ஒலிபரப்பிகளின் இயக்கம் தடைபட்டது. அவர்களை பேச்சைத் தொடர்ந்தவுடன் கூக்குரலும் கூச்சலும் மிகுந்தன.

பின்னர் தேசாய் காமராசரைப் பேசுமாறும் பொதுமக்களை அமைதியாய் இருக்குமாறும் வேண்டிக் கொண்டார். அதன் பிறகு காமராசர் தனது பேச்சைத் தொடங்கினர். பின்னர்ப் பேரொலியும் பெருங்குழப்பமும் தொடங்கிவிட்டதால் காமராசர் தனது பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்.

இதே போன்று மொரார்சி தேசாய் பேசத் தொடங்கும்பொழுதும் பெருத்த ஆரவாரம் எழுந்து, தேசாய் பேசுவது தடைப்பட்டது.

"குறள்நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.

அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50
ஆண்டுக்கட்டணம் உரு. 25-00
புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25% கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :
தனி இதழ் விலை 25 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 6-00
இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00
புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:
தனி இதழ் விலை 20 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 5-00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு :

ஆசிரியர்
'குறள்நெறி'
திருப்பரங்குன்றம்
மதுரை—5

தி. மு. க. மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமா?

வருகிற திசம்பர்த் திங்கள் 24, 25, 26, 27, நாட்களில் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டிற் பங்கு கொள்ள வேண்டுமா?

மதுரையிலிருந்து இதற்கெனவே சிறப்புந்து ஒன்று செல்கிறது.

விவரங்கட்கு :

ஆதலிங்கம்.
முரசொலி விற்பனையாளர்,
திருப்பரங்குன்றம்,
மதுரை-5.

விடை பெறுவிழா

தஞ்சாவூர், நவ 5-

தஞ்சை மருத்துவக்கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த திரு. செயக்குமார் மதுரை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மருத்துவக் கல்லூரி மாணவர்களிடையே செல்வாக்கும் தஞ்சை மக்களிடம் நற்பெயரும் பெற்ற இவர் பிரிந்துசெல்வதை ஒட்டி ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

இதில் மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர்களும், பிறமருத்துவர்களும் பங்குகொண்டு செயக்குமாரின் திறமையைப் பாராட்டிப் பேசினர்.

இறுதியில் செயக்குமார் நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டார்.

தேவை

குறள்நெறி நாளிதழ் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை.

இப்படிக்கு
செயலர்,
குறள்நெறி.

இந்தி எதிர்ப்பு மாநாடு

காரைக்குடி நவ. 5-

தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் சார்பில் மாணவர் மாநாடு வருகிற நவம்பர்த்திங்கள் 26, 27-இல் காரைக்குடியில் நடைபெற இருக்கிறது.

காரைக்குடி மாணவர் தலைவர் சீவா. கலைமணி இதற்கான ஏற்பாடுகளைச் செவ்வனே செய்து வருகின்றார்.

இம்மாநாட்டில் தமிழகத்தின் எல்லாக் கல்லூரிகளின் சார்பாக மாணவர்களும், அரசியல் தலைவர்களும் பங்கு கொள்வர் எனத் தெரிகிறது.

மதுரை: 6—11—66 ஞாயிறு

குறள்நெறி

வெளியூர்: 7—11—66 திங்கள்

விலை உயர்வை எதிர்த்து மதுரையில் இன்று அனைத்துக் கட்சிகளின் ஊர்வலம்!

மதுரை ஐப்பசி உக: விலைவுயர்வை எதிர்த்து மதுரையில் உள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பில் உணவுப் பேரணி ஊர்வலம் நடைபெறுகின்றது. அனைத்துக் கட்சிகளின் சார்பில் அமைக்கப்பட்ட குழு கீழ்கண்ட வேண்டுகோள்களை வற்புறுத்தியுள்ளது.

1. நாளொன்றுஆளொன்றுக்கு 12 அவுன்சு அரிசியும் நாலு அவுன்சு பிறதானியங்களும் கொடுக்கவேண்டும்.

2. இன்றியமையாத பொருள்களின் விலையை 1960-ம் ஆண்டு விலைக்கு விற்குமாறு செய்யவேண்டும்.

3. வட்டத்துக்கு வட்டம் உள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்.

4. மதுரை நகரைச் சுற்றியுள்ள ஊர்களில் வாழும் மக்களுக்கு உணவுப் பொருள் வழங்க ஏற்பாடுச் செய்ய வேண்டும்.

இந்த வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் இரண்டு வார காலமாக மதுரையெங்கும் பல இடங்களில் பொதுக் கூட்டம்நடத்தினார்கள். இன்று ஊர்வலம் நடத்துகிறார்கள். இந்தஊர்வலத்திற்குஉணவுப் போரணி என்று பெயரிட்டு உள்ளனர். (உணவுப் பேரணி என்று அழைக்கின்றோம்)

இதில் பத்து எதிர்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். கட்சிகளின் சார்பாகக் கலந்து கொள்ளுபவர்கள்:

1 திருமதி. சத்தியவாணி முத்து (தி. மு. க.)
2 திரு. என். சங்கரய்யா (இ. பொ)
3 திரு.என். கிருட்டினசாமி (வ. பொ)
4 திரு. வி. கே. தாசு (ச. சோ)
4 திரு. கே. சு. விசயராகவன் (மு. க)
6 திரு. என். கே. பாகுலேயன் (பி. சொ)
7 திருமதி. வீரலட்சுமி உடையப்பா (த.அ)
8 திரு. எசு. எம். செரீப் (மு. லீ)
9 திரு. குளித்தலை இராமதாசுபாரதி (சுதந்திரா)
10 திரு.தே.கிருட்டினமூர்த்தி (ச. சங்கம்)

இந்த ஊர்வலத்தில் பத்துக் கட்சிகளின் கொடிகளும் எடுத்துச் செல்லப்படும். கொடியின் நீளம் 60 அங்குலமும் அகலம் 40 அங்குலமும் இருக்குமாம். இந்தக் கொடிகளின் பக்கத்திலேயே அந்தந்த கட்சித் தலைவர்களும் நடந்து செல்வார்களாம். ஊர்வலத்துக்குமுன் கட்சித் தொண்டர்கள் கொடிகளை ஏந்தி மிதிவண்டியில் செல்வார்கள்.

மாலை 3 மணிக்கு தினமணி திரைப்படக் கொட்டகைக்கு அருகிலுள்ள மணல் மேட்டிலிருந்து இந்த ஊர்வலம் புறப்பட்டு இராமநாதபுரம் சாலை, தெற்குமாசி வீதி மேலமாசி வீதி வடக்குமாசி வீதியாகச் சென்று தமுக்கம் பெருவெளியை அடையும். இவ்வூர்வலத்திற்கு அனைத்துக் கட்சிக் குழுவின் அமைப்பாளர் திரு. கார்மேகம் தலைமை ஏற்கின்றார்.

இரவு 7 மணிக்குப் பொதுக் கூட்டம் தொடங்கும்.

பழநிக் கல்லூரி மாணவர்கள் படிப்பு நிறுத்தம்!

பழநி, நவ. 5- பழநியில் பழநியாண்டவர் கலைக் கல்லூரி மாணவர்கள் இன்று கல்லூரி செல்லாமல் படிப்பு நிறுத்தம் செய்துள்ளனர். பதினெட்டு வேண்டுதல்களை வெளியிட்டுள்ளார்கள். பேராசிரியர்கள் தகாத முறையில் நடந்துக்கொள்வதாகவும் மாணவர்களுக்கு போதுமான வசதிகள் இல்லையென்றும், கல்லூரி ஆட்சியாளர்கள் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளாமல் பெற்றோருடன் நேரிடையாகத் தொடர்பு கொள்ளக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

சொல்விளக்கம்–1

தேசம் தமிழ்ச் சொல்லா?

தேசம் என்ற சொல் தேயம் என்பதன் திரிபாகும். தொல்காப்பியர் காலத்தில் தேம் என்று இருந்து சங்க காலத்தில் தேயம் என்று மாறுதலுற்றது. தேசம் எனத் தற்பொழுது வழங்கிறது.

அதுவே வடமொழியில் "தேசம்" என்றும் இந்தியில் "தேஷ்" என்றும் ஆகியுள்ளது.

எனவே 'தேசம்''தேயம்'' என்பன தமிழ்ச் சொற்களே ஆகும்.

குறிப்பு:

வேற்றுமொழி விரவா வண்டமிழ் நடையிலேயே குறள்நெறி அன்பர்கள் பேசவும் எழுதவும் வேண்டும் அயல்மொழிக் கலப்பு அன்னைத் தமிழைக் கெடுக்கும் அன்றோ? எனவே தூய தமிழில் எழுத விழைவோர்க்குத் தனித்தமிழ்ச் சொற்களைத் தெளிவுறுத்தும் வண்ணம் இப்பகுதி தொடங்கப் பெற்றுள்ளது.

தனித் தமிழ்ச் சொற்களைக் குறித்துத் தம் ஐயத்தைப் போக்கிக் கொள்ள விரும்புவோர் உடன் எழுதுக.

"சொல்விளக்கம்"
குறள்நெறி, மதுரை-5

மருத்துவக் கல்லூரி மாணவர் தாக்கப்பட்டார்

மதுரை, நவ. 5- 4–11–66 காலை ஒன்பது மணியளவில் மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர் திரு. இராசேந்திரனை "காங்கிரசுக்காரர்கள்" என்று சொல்லப்படுபவர்கள் கத்தி கம்பு முதலியவை கொண்டு தாக்கியிருக்கின்றனர். தாக்கபட்ட மாணவர்களைக் காப்பாற்ற வந்த துரைராசன், சுரேந்திரன் முதலிய மாணவர்களும் தாக்குதலுக்கு ஆளாயினர். தாக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் தாக்கப்பட்ட மாணவர்கள் கல்லூரி விடுதியினின்றும் நீக்கப்பட்டுள்ளனராம்.

நிகழ்ச்சிநடந்த இரவு தேனி என். ஆர். தியாகராசன் எம். எல். சி. மருத்துவக் கல்லூரிக்கு வந்து சென்றாராம். இந் நிகழ்ச்சி மாணவர்களிடையே பெரும் சீற்றத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது'

இதுபற்றி முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னேற்றக் கட்சித் தலைவர் மூக்கையாத்தேவர் ஆகியவர்கட்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகரிகக் களவு!

புதுதில்லி, நவ. 4 சென்றஆண்டு செப்டம்பர்த் திங்கள் இந்திய பாகிச்தானியச் சண்டையின் போது பாகிச்தான் கைப்பற்றிக் கொண்ட இந்தியச் சரக்குக் கப்பல்களில் இருந்த பொருள்களில் எண்பது விழுக்காட்டைப் பாகிச்தானியர் பயன்படுத்தியுள்ளனர் எனத் தெரிகிறது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது வணிக அமைச்சர் மனுபாய்சா இங்ஙனம் குறிப்பிட்டார்.

போர்க்காலத்தில் இந்தியா கைப்பற்றிக் கொண்ட பாகிச்தானியக் கப்பல்களில் உள்ள சரக்குகளின் மதிப்பு 2½ கோடி எனவும் பாகிஃச்தான் கைப்பற்றிக்கொண்ட இந்தியப் பொருட்களின் மதிப்பு 8 கோடிஎனவும் அவா குறிப்பிட்டார். பிரிட்டிசுக் காப்பீட்டுக் கழகம் ஒன்றின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பொருட்களே பாக்கிச்தானியரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதென்றும் அவர் குறிப்பிட்டார் இப்பொருட்களின் மதிப்புத் தொகையைப் பெறுவதற்கு இக்காப்பீட்டுக் கழகத்திடம் அரசினர் முறையிடுவரென்றும் அவர் கூறினார்.

சேலம் எஃகாலை உறுதியாம்!

பக்தவத்சலம் நம்பிக்கை!

சென்னை, நவ 5- 'சேலம்எஃகாலைநான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் நிறுவப்படுவது உறுதி'| எனத் தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் பக்தவத்சலமும்தொழிலமைச்சர் வெங்கடராமனும் சேலம் எஃகாலைப் பற்றிய கேள்விகட்கு விடையளிக்கையில் கூறினார்.

முதலமைச்சர்பக்தவத்சலம் நான்காவது திட்டத்தில் சேலம்எஃகாலையும் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகக் கூறினார். சேலம் எஃகாலைப் பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் "நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் எஃகாலைத் திட்டம் செயற்படாது அல்லது சேர்க்கப்படவில்லை எனக் கூறுவது தவறு.

நடுவண் அமைச்சரவைத் துணைக்குழு அளித்துள்ள அறிக்கையில் நிதிநிலை சரியாக இல்லை எனக் கூறப்படுகிறதே தவிர சேலத்தில் எஃகாலை அமைக்க இயலாது எனக் குறிப்பிடப்படவில்லை நான்காவது திட்டத்தில் தமிழ்நாட்டிற்கான பங்குகுறித்து மாநில அரசு நடுவண் அரசுடன் 15, 16, 17-ஆம் நாட்டில் ஆய்வு நிகழ்த்தப்போகிறது. அப்போதுசேலம் எஃகாலை குறித்தும் ஆய்வு நடாத்தப்படும்.';

அவவாய்வுக்குப் பின்னர் சேலம் எஃகாலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" எனக்கூறினார்.

தொழிலமைச்சர்வெங்கடராமன் "சேலம்எஃகாலை நான்காவத திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். அவ்விதம சேர்த்துக்கொள்ளப்படா விட்டால் மாநில அரசே இத்திட்டத்தை ஏற்று நடாத்துதற்கு நடுவண் அரசிடம் ஒப்புதல் கேட்டுள்ளது" எனக்கூறினார்.

அவர்மேலும் பேசுகையில். "மாநில அரசே சேலம் எஃகாலைத் திட்டத்தை ஏற்று நடத்தினால் அயல்நாட்டுச் செலவாணி குறித்துக் கவலை கொள்ள வேண்டாம் எஃகாலைக்குரிய கருவிகளைச் சப்பான் தருவதாகத் தெரிவித்துள்ளது" எனக் கூறினார்.

ஐந்து நூறாயிரம் 'டன் எஃகு ஆக்கல் நடைமுறையிற் செய்ய இயலும் என்றும் இதற்கு வெளிநாட்டார் துணையும் உறுதியாகக் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

சேலத்தில் எஃகாலை நிறுவப்படுவது குறித்துச் சட்டமன்றத்தில் ஆய்வு நிகழ்த்த வேண்டும்" என்று பொதுவுடைமை உறுப்பினர் எம். கல்யாணசுந்தரம் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவைத் தலைவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

முதலமைச்சர் இதுபற்றி குறிப்பிடுகையில் "நான்காவது திட்டத்தில் சேலம் எஃகாலை சேர்த்துக் கொள்ளபடாது எனக்கூறப்படவில்லை சேலம் எஃகாலை குறித்து மாநில அரசு நடுவண் அரசுடன் ஆய்வு நிகழ்த்தி இருக்கிறது. எனவே இத்தீர்மானம் தேவையில்லை". எனக் கூறி ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தள்ளி வைத்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம்: ,மதுரை 5 தொலைபேசி:8-65,